
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**780**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## ‘ஆரிய மாடலா? திராவிட மாடலா?’

பெரியார் குறித்து வைக்கப்படும் விமர்சனங்கள், அவதூறுகளுக்குப் பதிலடியாக திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், ‘பெரியார் ஏன் எதிரிகளைப் பதற வைக்கிறார்?’ என்ற தலைப்பில், தமிழ்நாடு முழுவதும் ஐந்து முனைகளில் தொடங்கி, 500 பரப்புரைக் கூட்டங்களையும், இறுதியாக மயிலாடுதுறையில் மார்ச் 22 அன்று, நிறைவு மாநாடும் நடத்தவுள்ளனர்.




இந்த மாநாட்டில் திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய, ‘ஆரிய மாடலா? திராவிட மாடலா?’ என்ற நூல் ‘நிமிர்வோம்’ பதிப்பக வெளியீடாக வெளியிடப்படவுள்ளது. கருத்துச் செறிவு மிகுந்த கட்டுரைகள், வரலாற்றுத் தகவல்கள், நிகழ்கால அரசியல் பார்வைகள் கொண்ட தொகுப்பாக இந்நூல் உருவாகியுள்ளது.

இந்நூலைப் பெற மார்ச் 15 முதல் 22 வரை முன்பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. நூலின் விலை ரூ.500. முன்பதிவு செய்வோருக்கு ரூ.300 என்ற சலுகை விலையில் (தபால் செலவு ரூ.50) நூல் அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்பதிவு செய்வோருக்கு, மாநாட்டுத் திடலிலும் நூல் வழங்கப்படும்.

முன்பதிவிற்கு 94986-56683 என்ற எண்ணில், ஜி-பே செய்துவிட்டு, இதே எண்ணுக்குத் தகவல் அளிக்கலாம். தொடர்புக்கு: 98416-53200 (வாட்ஸ் அப்பில் மட்டும்).

## ப்ளாஷ்பேக்





ஏ.சி.தேவகுமார்

### கழகமே குடும்பம்! குடும்பமே கழகம்!

என் மாமா ஏ.கே.அனுமந்தராயன் அவர்கள், 1952-ஆம் ஆண்டில், வாணியம்பாடி தொகுதியில் கழகத்தின் ஆதரவுடன் வெற்றிபெற்ற சுயேட்சை வேட்பாளர். பெரியப்பா முனிரத்தினம் வாணியம்பாடி நகரக் கழகத்தின் முதல் நகரச் செயலாளராக இருந்தவர். என் தந்தை ஏ.எல்.சின்னராசன் திம்மாம்பேட்டை கிளைச் செயலாளராகச் செயல்பட்டவர். 1984-ஆம் ஆண்டில் திம்மாம்பேட்டையில், நடைபெற்ற பொதுக்கூட்டத்துக்கு வருகை தந்த தலைவர் கலைஞர் அவர்களை எங்கள் இல்லத்துக்கு அழைத்து வந்தார் அப்பா. தலைவரிடம் அண்ணா அறிவாலய கட்டட நிதியாக ரூ.25 ஆயிரம் அளித்தார் பெரியப்பா ஏ.எல்.மைல்கண்ணன். தலைவர் எங்கள் இல்லத்தில் உணவருந்தி, உரையாடிச் சென்றார். அண்ணன் ஆற்காட்டார் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்த காட்சி.

– ஏ.சி.தேவகுமார்,
திருப்பத்தூர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்,
வாணியம்பாடி.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மொழிவழி மாநிலக் குறைகள்!!

1956-ஆம் ஆண்டு நவம்பர் 1-ஆம் தேதி முதல் 14 மொழிவழி மாநிலங்களும், 6 ஒன்றிய ஆட்சி பிரதேசங்களும் அமைக்கப்பட்டன. புதிய மாநிலங்கள் அமைக்கப்பட்டதில் உள்ள குறைகளை, தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சி, தமிழரசுக் கழகம் மற்றும் காங்கிரஸ் அல்லாத பிற கட்சியினர், 4.11.1956 அன்று கோகலே மண்டபத்தில் கூடி சுட்டிக்காட்டியதுடன், தீர்மானங்களையும் நிறைவேற்றினர்.

## திராவிட மாடல் அரசு

ர.பிரகாசு

**112**

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

# பெரியார் அரசு மருத்துவமனை!

## கொளத்தூர் மக்களுக்கு முதல்வரின் பரிசு!





மூட நம்பிக்கைகளாலும், ஏற்றத்தாழ்வுகளாலும் சமூகப் பிணிக்கு ஆட்பட்டுக் கிடந்த தமிழ்நாட்டைக் குணப்படுத்த, ‘பகுத்தறிவு வைத்தியம்’ பார்த்த தந்தை பெரியாரின் பெயரால் சென்னை கொளத்தூரில் ‘பெரியார் அரசு மருத்துவமனை’ அமைத்திருக்கிறது, திராவிட மாடல் அரசு.

### தமிழ்நாடும் சுகாதாரமும்!

வளர்ச்சி என்பது தொழில்துறையை மட்டும் சார்ந்தது அல்ல. மக்கள் நல்வாழ்வுதான் முதன்மையான, அடிப்படையான வளர்ச்சி. அந்த நல்வாழ்விற்குப் பொருளாதாரம் மட்டுமே அடிப்படை அல்ல, பலமான சுகாதாரக் கட்டமைப்பும் முக்கியமான அடிப்படை. பொருளாதார பலத்தை தனிநபர்கள் ஏற்படுத்திக்கொள்ளலாம், ஆனால், சுகாதாரக் கட்டமைப்பை அரசுதான் முன்நின்று வழங்க முடியும். அத்தகைய சுகாதாரக் கட்டமைப்பை, இந்தியாவில் மற்றெந்த மாநிலங்களையும் விட, மிகச்சிறப்பாக வழங்கும் மாநிலம் தமிழ்நாடு.

குறிப்பாக, 5 கிலோ மீட்டருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம், நகராட்சிக்கு ஒரு அரசு மருத்துவமனை, மாவட்டம்தோறும் ஒரு தலைமை அரசு மருத்துவமனை, பன்னோக்கு உயர் மருத்துவமனை, உயர் தர சிகிச்சைக்கான நவீன கருவிகளை வாங்குதல், மருத்துவ மாணவர் சேர்க்கையில் நுழைவுத்தேர்வை ஒழித்துக்கட்டியது, மருத்துவ உயர்படிப்பில் இடஒதுக்கீட்டை செழுமைப்படுத்தியது என முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் இருந்தபோதெல்லாம் தமிழ்நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பை உலகத் தரத்துக்கு உயர்த்த உழைத்துக்கொண்டே இருந்தார்.

அவரால் ‘உழைப்பு... உழைப்பு... உழைப்பு’ எனப் போற்றப்பட்ட இன்றைய நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும், சுகாதாரக் கட்டமைப்பின் வலைப்பின்னலை வலுப்படுத்த, தமிழ்நாடெங்கும் பல மாவட்டங்களில் அரசு மருத்துவமனைகளைத் தரம் உயர்த்திக் கொண்டிருக்கிறார்.

சென்னையில் கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு மருத்துவமனையைத் திறந்தார். அடுத்து, தனது சொந்த தொகுதியான கொளத்தூரில் கலைஞரின் ‘அய்யா’, ‘தமிழ்நாட்டின் தந்தை’ பெரியாரின் பெயரில் ஒரு மருத்துவமனையைத் திறந்துள்ளார்.

### பெரியார் நகரில் பெரியார் மருத்துவமனை

வடசென்னையை, வளர்ந்த சென்னையாக்க திராவிட மாடல் அரசு கடந்த நான்காண்டுகளில் தனித்துவமான பல திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. அந்தவகையில், கொளத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதி மக்களுக்குத் தரமான உயர் மருத்துவ சிகிச்சைகளை வழங்க, பெரியார் நகரில், தரை மற்றும் 3 தளங்களுடன் கூடிய புதிய மருத்துவமனையைக் கட்ட 2023-ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் தேதி முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார். ஆனால், கொளத்தூரின் மக்கள் தேவையைப் புரிந்துகொண்டு, சில சிறப்பு சிகிச்சைகளுக்கான வசதிகளை இணைக்கும் வகையில், கூடுதலாக 3 தளங்கள் இணைக்க முடிவெடுக்கப்பட்டது. 2024-ஆம் ஆண்டு மார்ச் 7-ஆம் தேதி கூடுதல் தளங்களுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

210.80 கோடி ரூபாய் செலவில் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று, ஓராண்டில் மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டது. பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பிரமாண்ட மருத்துவமனையை 27.02.2025 அன்று திராவிட மாடல் நாயகர், தமிழ்நாட்டின் முதலமைச்சர் திறந்துவைத்தார். மருத்துவமனைத் திறப்பு விழாவில் பேசிய முதலமைச்சர்,

“இந்த மருத்துவமனைக்குப் பெயர் வைப்பது தொடர்பாக, அமைச்சர் சேகர்பாபு அவர்கள் என்னிடம் கேட்டார். அப்போது, பெரியார் நகரில் இருக்கும் இந்தப் பெரிய மருத்துவமனைக்கு, பெரியார் பெயரையே வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று சொன்னேன்! ஏன் என்றால்,

> **கொளத்தூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசித்து வரும் மூன்றரை லட்சத்திற்கும் அதிகமானோருக்கு மருத்துவத் தேவைகளைத் தீர்க்கும் மாமருந்தாக அமைந்திருக்கிறது ‘பெரியார் அரசு மருத்துவமனை’.**

அவர்தான் நம்முடைய சமூகத்தில் நிலவிய, சமூகப் பிணிகளுக்கு மருத்துவம் பார்த்த சமூக மருத்துவர். பெரியார் பெயரைச் சூட்டியதில் பெரியாரின் தொண்டனாகப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!” என்றார்.

### மருத்துவமனையின் வசதிகள்!

ஆறு தளங்களைக் கொண்ட இம்மருத்துவமனையில் 560 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆறு அறுவை சிகிச்சை அரங்குகள் உள்ளன. நவீன ரத்த வங்கி அமைக்கப்பட்டுள்ளது. முதல் தளத்தில் மகப்பேறுப் பிரிவு, 3 அறுவை சிகிச்சை அரங்கங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவப் பிரிவுகள் உள்ளன. இரண்டாவது தளத்தில் முழு உடல் பரிசோதனைக் கூடம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவப் பிரிவுகள் உள்ளன. 3-வது தளத்தில் மகப்பேறுப் பிரிவு, குடும்பக் கட்டுப்பாடு வார்டு ஆகியவை உள்ளன.

நான்காவது தளத்தில் ஆண்களுக்கான பொது மருத்துவப் பிரிவும், இரைப்பை உடலியல் பிரிவும், மைய ஆய்வகமும், எக்ஸ்ரே பிரிவும் உள்ளன. ஐந்தாவது தளத்தில் இருதயவியல் பிரிவும், 3 அறுவை சிகிச்சை அரங்கங்களும், இதய நோய்களைக் கண்டறியும் ஆய்வகமும் (Cath Lab), தோல்நோய்கள் தொடர்பான சிகிச்சைப் பிரிவுகளும் உள்ளன. ஆறாவது தளத்தில் புற்றுநோயியல் பிரிவு, நரம்பியல் பிரிவு, மருத்துவமனையின் நிர்வாக



அலுவலகம் ஆகியவை உள்ளன. மொத்தம் 102 மருத்துவர்கள், 194 செவிலியர்கள், 79 மருத்துவம் சாரா பணியாளர்கள், 20 அமைச்சுப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### கல்வியும் மருத்துவமும் நமது கண்கள்!

கொளத்தூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசித்து வரும் மூன்றரை லட்சத்திற்கும் அதிகமானோருக்கு மருத்துவத் தேவைகளைத் தீர்க்கும் மாமருந்தாக அமைந்திருக்கிறது ‘பெரியார் அரசு மருத்துவமனை’. மருத்துவமனையைத் திறந்துவைத்து முதலமைச்சர் பேசியபோது, “கல்வியும் மருத்துவமும்தான் நம்முடைய திராவிட மாடல் அரசின் இரு கண்கள். அதனால், கல்விக்குக் கவனம் செலுத்துவது போலவே மருத்துவத்திற்கும் கவனம் செலுத்துகிறோம். இந்த வரிசையில் அமைந்ததுதான் கொளத்தூர் பெரியார் அரசு மருத்துவமனை.

இங்கு பணியாற்றும் மருத்துவர்கள், பணியாளர்கள் உங்களை நம்பி மருத்துவம் பார்க்க வரும் மக்களை உங்கள் குடும்பத்தில் ஒருவராகப் பாருங்கள், பரிவோடு சிகிச்சை கொடுங்கள், பொதுமக்களும் மருத்துவமனையைத் தூய்மையோடு பேணிக் காக்கவேண்டும். கட்டமைப்பை உருவாக்குவது எவ்வளவு முக்கியமோ அதே அளவு அதைப் பாதுகாப்பதும் மிகவும் முக்கியம்”என்றார்.

கடைசி வரிகள் பொதுமக்களுக்கு மட்டும் பொருந்தாது. அரை நூற்றாண்டுக்கும் மேலாக தமிழ்நாடு கட்டிக்காத்து வரும் சுகாதாரக் கட்டமைப்பைப் பாதுகாப்பதற்கும் பொருத்தமான கருத்து அது. அதை கச்சிதமாகச் செய்துகொண்டிருக்கிறார், நமது திராவிட மாடல் நாயகர்! கொளத்தூர் பெரியார் அரசு மருத்துவமனையும் அதற்கு ஒருதுளிச்சான்று!.

...சாதனை தொடரும்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131